BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# முகத்திரைகளை கட்டாயமாக்குதலுக்கான உப சட்டத்திற்கு ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஒப்புதல் அளிக்கிறது

***ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகளுக்கு, மருத்துவம் அல்லாத ஒரு மில்லியன் முகக் கவசங்கள் வினியோகிக்கப்பட இருக்கின்றன***

ப்ராம்ப்ட்டன், ON (ஜூலை 9, 2020) – ஜூலை மாதஸ 10 ஆம் தேதி துவங்கி, ப்ராம்ப்ட்டன் நகரில் பொது இடங்களில் கட்டிடங்களுக்குள்ளாக, மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணிவது அவசியமாகும்; இது கோவிட்-19 தொற்று பரவலைத் தடுப்பதில் உதவுவதற்கேயாகும்.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் ஆலோசனையின் பேரில், ப்ராம்ப்ட்டன் நகரசபையானது நேற்று ப்ராம்ப்ட்டன் நகரில் கோவிட் -19 தொற்று பரவலுக்கு எதிராக கட்டாய முகத்திரைகள் அணியும் சட்டத்தை நிறைவேற்றியது; இது அக்டோபர் 1, 2020 வரை நடைமுறையில் இருக்கும். இந்த நடவடிக்கை பொருத்து, சமுதாயத்தினருக்கு ஆதரவளிக்கும் வகையில், நகர நிர்வாகம் ஒரு மில்லியன் மருத்துவம் அல்லாத முகக் கவசங்களை தனது குடியிருப்புவாசிகளுக்கு விநியோகிக்க இருக்கிறது; ப்ராம்ப்ட்டன் நகரில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் மூன்று முகமூடிகள் என, அஞ்சல் மூலம் இவற்றை அனுப்பவிருக்கிறது.

பொது நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் ஆகியவை, தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்ற உள்ளரங்க பொது இடங்களில் முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகளை அணிந்திருப்பதை உறுதி செய்யவேண்டும் என இந்த தற்காலிக உப சட்டம் கோருகிறது.

மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகள் அணியத் தேவைப்படும் இடங்கள் பின்வருமாறு:

- பொருட்கள் மற்றும் சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கும்/விற்பனை செய்யும் சில்லறை கடைகள்
- பிரதானமாகவே உணவு விற்பனை செய்கின்ற உணவகங்கள், பல்பொருள் அங்காடிகள், மளிகைக் கடைகள், பேக்கரிகள் மற்றும் இதர வசதிப்பொருள் விற்பனை கடைகள் உள்ளிட்ட வணிக அமைப்புக்கள்
- , எல்லா தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் பிற வழிபாட்டுத் தலங்கள்; முகம் மறைக்கப்படுவது, ஒரு மத சடங்கு அல்லது விழாவின் போது பொருத்தமாக இருக்காது என்னும் இடங்கள் தவிர
- உள்ளரங்க சமூக மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்
- பெரும் வணிக வளாகங்கள் அல்லது அதுபோன்ற பல வணிக கடைகளைக் கொண்ட இதுபோன்ற கட்டிட அமைப்பு

- தனி நபர் அலங்கார சேவைகளை வழங்கும் வணிகங்கள்
- ஹோட்டல் மற்றும் இதர தங்குமிடங்களில் உள்ள பொதுமக்களுக்கான பகுதிகள் மற்றும் பிற குறுகிய கால தங்குமிடங்கள்
- நூலகங்கள், அருங்காட்சியகங்கள், ஓவிய/கலைப்பொருள் காட்சியகங்கள் மற்றும் இது போன்ற பிற வசதிக் கட்டிடங்கள்
- விருந்துபச்சார அரங்குகள், மாநாட்டு அரங்குகள், அரங்கங்கள், விளையாட்டரங்கங்கள் மற்றும் பிற நிகழ்ச்சிகள் நடத்தும் இடங்கள்
- இசைக் கச்சேரி அரங்குகள், நாடகக் கொட்டகைகள், சினிமாக்கள், கேசினோக்கள் மற்றும் பிற பொழுதுபோக்கு நிறுவன அமைப்புக்கள்
- திறந்த நிலை வளாகம், விளக்கக்காட்சி மையம் அல்லது நிலபுலன் பரிவத்தனை வகை நோக்கங்களுக்காக பிற வசதிகளாக பயன்படுத்தப்படும் கட்டிடங்கள்
- ப்ராம்ப்ட்டன் நகரத்திற்குள் இயங்குகின்ற தனி நபர் போக்குவரத்துக்கான அந்தந்த நிறுவனத்தின் வாகனங்கள்
- நகராட்சியால் இயக்கப்படும் கட்டிடங்கள்
- பிற வணிகங்கள், நிறுவன அமைப்புக்கள் மற்றும் அவசர கால உத்தரவுகளுக்கு ஏற்ப செயல்பட அனுமதிக்கப்பட்ட இடங்கள்.

இந்த உப சட்டத்தைக் கடைப்பிடிக்காத தனிநபர்களுக்கும் வணிகங்களுக்கும் குறைந்தபட்சம் $ 500 அபராதமும் மற்றும் ஒவ்வொரு குற்றத்திற்கும் அதிகபட்சமாக,$100,000 வரையிலான அபராதம் விதிக்கப்படலாம்.

மருத்துவ காரணங்களால் முகக் கவசம் அல்லது முகத்திரை அணிய முடியாதவர்கள் உள்ளிட்ட சில குறிப்பிட்ட நபர்களுக்கு இந்தத் துணை சட்டம் விலக்கு அளிக்கிறது; இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகள்; அவசர கால உத்தரவுகளுக்கு இணங்க ஒரு தடகள நடவடிக்கையில் ஈடுபடும் நபர்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட நிறுவனத்தில் உள்ளே அமர்ந்து உணவு அல்லது பானம் உட்கொள்ளும் நபர்கள் (உள்ளே அமர்ந்து உணவு பரிமாறி உண்பதை மாகாணம் நிர்வாகம் மீண்டும் அனுமதிக்கும் போது). இதற்கான முழு பட்டியலுக்கு, brampton.ca/masks ஐப் பார்வையிடவும்.

ஜூலை 2 ஆம் தேதி முதல் அனைத்து ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகள் மற்றும் முனையங்களிலும் மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிவது கட்டாயமாகும்.

மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அல்லது முகத்திரைகளை அணிவது, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு கோடிட்டுக் காட்டிய நான்கு முக்கிய தடுப்பு நடவடிக்கைகளில் ஒன்றாகும். தனிமைப்படுத்தியவாறு இருப்பது, கைகளை கழுவுவது அல்லது கை சுத்திகரிப்பியைப் பயன்படுத்துவது, மற்றும் COVID-19 தொற்று கொண்டிருக்கலாம் அல்லது அதற்கு ஆட்பட்டிருக்கலாம் என்று நீங்கள் நினைத்தால் உங்களை சோதனைக்கு உட்படுத்திக்கொள்ளுதல் ஆகியவை மற்ற மூன்று நடவடிக்கைகளாகும். peelregion.ca/coronavirus/core-four/ க்கு வருகை தரவும். மருத்துவம் அல்லாத மற்ற முகக் கவசங்கள், முகத்திரைகள் மற்றும் பிற தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் (பிபிஇ) ஆகியவற்றின்முறையான பயன்பாடு பற்றி மேலும் அறிய, peelregion.ca/coronavirus/prevention/ க்கு வருகை தரவும்.

வணிகங்கள் மற்றும் வசதியமைப்பினை இயக்குபவர்களுக்குத் தேவையான கூடுதல் தகவல்கள் மற்றும் ஆதார வளங்கள் brampton.ca/masks இல் கிடைக்கின்றன.

கோவிட்-19 தொற்றுப் பரவலுக்கு எதிரான ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் எதிர் நடவடிக்கைகள் பற்றிய சமீபத்திய புது தகவல்களுக்கு, brampton.ca/COVID19 ஐப் பார்வையிடவும்.

**அறிஞர் கூற்றுக்கள்**

“எங்கள் பொது சுகாதார அதிகாரிகளிடமிருந்து நாங்கள் கேள்விப்பட்ட வகையில், முகக் கவசங்களை கட்டாயமாக அணிவது கோவிட்-19 தொற்று பரவுவதை நிறுத்துவதில் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாக இருக்கிறது. இந்த வைரஸைக் கடந்து செல்லத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க நாங்கள் தயாராக உள்ளோம், அதன் காரணமாகவே ப்ராம்ப்ட்டன் நகர குடியிருப்புவாசிகளுக்கு ஒரு மில்லியன் எண்ணிக்கையிலான மருத்துவம்-அல்லாத முகக் கவசங்களை நகர நிர்வாகம் விநியோகிக்க இருக்கிறது. ஜி.டி.ஏ (GTA) முழுவதிலுமாக முகக் கவசம் அணிவதற்கான கூட்டு அணுகுமுறையால் எனக்கு ஊக்கம் கிடைக்கிறது; அத்துடன், சமூகத்தின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பிற்கு, ப்ராம்ப்ட்டனில் வசிப்பவர்கள் முன்னுரிமை அளிப்பதிலும் பாதுகாப்பதிலும் தொடர்ந்து தங்கள் பங்கைச் செய்வார்கள் என்பதையும் நான் அறிவேன். ”

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"மீண்டும் திறப்பதற்கான நிலை 2 க்கு மாகாணம் முன்னேறியதில் நமது நகரம் எடுத்த முயற்சிகளின் பலன்களை நாங்கள் கண்டோம். இந்தக் கடின உழைப்பு தொடர வேண்டும். கட்டிடங்களின் உட்புறங்களில் மருத்துவம் அல்லாத முகக் கவசங்களை கட்டாயமாகப் பயன்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் குறித்து எங்கள் உள்ளூர் சுகாதார நிபுணர்களின் ஆலோசனையைப் பின்பற்றுவதன் மூலம் மீட்புக்கான நமது பாதையில் நாம் முன்னேற முடியும். ”

*- மார்ட்டின் மெடெய்ரோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 3 & 4; தலைமைப் பொறுப்பு, மீண்டும் திறப்பது மற்றும் மீட்சி பெறுவதற்கான மேயரின் பணிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

”நகரம் படிப்படியாக மீண்டும் திறந்து சேவைகளை மீண்டும் பாதுகாப்பாக தொடங்குவதால், கோவிட்-19 தொற்று பரவுவதைத் தடுக்க உதவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம். மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அணிவதைக் கட்டாயமாக்குவது எங்கள் சமூகம் மற்றும் பொருளாதாரத்தின் சிறந்த நலனுக்காகவே செய்யப்படுகிறது; அத்துடன் நகரம் முழுவதிலுமாக வினியோகித்த உடன் எங்கள் ஊழியர்கள், குடியிருப்பாளர்கள் மற்றும் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கான அனைத்தையும் நாங்கள் செய்வோம்.”

*- டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca